தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆடி 2, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூலை 18, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஞாலம் கருதினும் கைகூடும், காலம்
கருதி இடத்தால் செயின்."

ஒரு தொழிலைச் செய்வதற்கேற்ற காலத்தையும், இடத்தையும் அறிந்து செய்தால் இந்த உலகத்தையே அடைய வேண்டுமென்று நினைத்தாலும் அது கைகூடும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

131—

விளையாட்டரங்கம்

***2095—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் விளையாட்டரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

[2019 ஜூலை 18

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ராதாபுரம் தொகுதி, வள்ளியூரில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலே இன்றைக்கு ஒரு சிறப்பான நாள். உணர்ச்சிபூர்வமான நாள். என்னவென்றால், 52 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்டுவந்த இந்த மண்ணை, தமிழ்நாடு என்று அழைக்க வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் இந்த அவையிலே வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தமிழகத்தினுடைய ஆபிரகாம் லிங்கன், மலையடிக்கும் தனது பேச்சால் மயிலுக்கும் நடனத்தையைக்கற்றுத் தந்த, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்த அந்த நேரத்திலே அந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டுவந்து, ஏகமனதாக நிறைவேற்றி, மூன்று முறை அண்ணா அவர்கள் தமிழ்நாடு என்று அழைக்க, அன்றைக்கு இருந்த உறுப்பினர்களெல்லாம் வாழ்க வாழ்க என்று மூன்று முறை கோஷம் எழுப்பியதெல்லாம் வரலாறு தன்னுடைய நெடிய பக்கங்களிலே வாஞ்சையோடு குறிப்பெடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சிறந்த நாளில், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், நீங்கள் அமர்ந்திருக்கிற இந்த ஆசனத்திலே அன்று அமர்ந்திருந்த தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்கள், தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்பதற்காக தன் இன்னுயிரை ஈந்த திரு. சங்கரலிங்கனார் அவர்கள் ஆகியோர் நம்முடைய நெஞ்ச பாத்தியிலே என்றைக்கும் நீக்கமற நிறைந்திருப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.*

என்னுடைய ராதாபுரம் தொகுதியில், வள்ளியூரில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டும் என்று கேட்டேன். மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அது பரிசீலனையில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய

2019 ஜூலை 18]

தொகுதியிலேதான், சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் நிறைந்திருக்கிறார்கள். உதாரணமாக குரேஷியா என்ற ஒரு பெண் தமிழகத்திற்கு பெருமை சேர்க்கிற வகையில், National Championship பட்டத்தைப் பெற்று வந்திருக்கிறார். சமீபத்தில்கூட 11 வயதிற்குட்பட்ட பிரிவில் ஜெனிஷ்டா என்ற ஒரு பெண் Long jump-ல் தேசிய சாதனையான 4.12 மீட்டர் நீளத்தைத் தாண்டி National Championship பட்டத்தை வாங்கி வந்திருக்கிறார். அதுபோல, கடந்த 4 நாட்களுக்கு முன்பாக, ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஜூனியர் காமன்வெல்த் பளுதூக்கும் போட்டியில் எங்களுடைய ராதாபுரம் தொகுதியில் இருக்கிற ஆரோக்ய அலிஷா என்ற பெண் வெள்ளிப் பதக்கத்தை பெற்று வந்திருக்கிறார். இத்தனை சிறப்புமிக்க வீராங்கனைகளை, வீரர்களைக் கொண்டிருக்கிறது என்னுடைய ராதாபுரம் தொகுதி. அதனால் வள்ளியூரில் ஒரு விளையாட்டரங்கம் அமைக்க வேண்டும் என்று கேட்டேன். ஏனென்றால், இந்த அரசுதான் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கிற அரசு. விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கிறவிதத்தில் மூன்று சதவிகித இட ஒதுக்கீட்டைத் தந்திருக்கிற ஒரே அரசு, இந்தியாவிலேயே அம்மாவினுடைய அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள் தலைமையிலான இந்த அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த அரசு வள்ளியூரில் ஒரு விளையாட்டு அரங்கத்தை அமைத்துத் தரும் என்ற நம்பிக்கையோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அமைத்துத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உரையாற்றுகிறபோது, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இதேநாளில் எல்லோருடைய உள்ளங்களிலும் நிறைந்திருக்கிற தமிழ்நாடு என்ற அந்தப் பெயரை மூன்று முறை சொல்லி, தீர்மானத்தை நிறைவேற்றினார் என்று குறிப்பிட்டார்கள். அதோடு மட்டுமல்ல, அவருடைய உணர்வுகள் எப்படியிருக்கின்றன என்று சொன்னால், விளையாட்டு அரங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற அளவில் இருக்கிறது. விளையாட்டு அரங்கங்கள் உருவாக்கப்பட

வேண்டுமென்றால் உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான இடங்களோ அல்லது அரசுக்குச் சொந்தமான இடங்களோ இருந்து அவை எங்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டால், ஆய்வுப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு பணிகளை நாங்கள் மேற்கொள்வோம். ஆனால் நிலத்தை எங்களிடத்திலே ஒப்படைக்கவில்லை. ஆகவேதான் நிலத்தை ஒப்படைத்தவுடனேயே தாங்கள் கூறுவதைப்போல அங்கே விளையாட்டு அரங்கங்கள் உருவாக்குவதற்கு அரசு மதிப்பீடு செய்து, வருகின்ற ஆண்டில் அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிப்பான செய்தியை நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பரிமாறியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே விளையாட்டு அரங்கம் அமைக்க இரண்டு இடங்களிலே அதற்குத் தேவையான இடத்தைத் தேடி ஆய்வு செய்தோம். பணகுடியிலே, மனோ கல்லூரி அருகே தேவையான அளவு இடம் இருக்கிறது. அதை ஆய்வு செய்து, இப்போது நாம் தமிழக அரசிற்கு அனுப்பியிருக்கிறோம்.

முற்பகல் 10—05

அதுபோல, வள்ளியூரில் அரசு மருத்துவமனைக்கு எதிரில் நீச்சல் குளத்தோடு துப்பாக்கி சுடும் தளத்தோடு கூடிய—துப்பாக்கி சுடும் தளம் உருவாக்குவதற்கு உகந்த இடம் ராதாபுரம் தொகுதியில் மட்டும்தான் இருக்கிறது. எங்கள் தொகுதியில் விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் இருக்கின்றனர். ஒரு தேசத்தின் பெயர் என்றைக்கு உயரப் பறக்கிறது என்றால், உலக வரைபடத்தில் தேடுகின்ற ஒரு தேசத்தை அந்த தேசத்தில் இருக்கிற விளையாட்டு வீரர்கள்தான் உலகளவில் உயர்த்திப் பிடிக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டின் கொடியை உயர்த்திப் பிடிக்கின்ற வீரர்களைக் கொண்டிருக்கிற ராதாபுரம் தொகுதியில் நீங்கள் விளையாட்டு அரங்கம் அமைத்துத்தர வேண்டும் என்று மீண்டும் கேட்டு, நல்ல செய்தியைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

2019 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது இந்திய நாட்டின் வரலாற்றில் தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், விளையாட்டுக்காகவே ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கி, வரலாறு படைத்தார் என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு பொதுத் துறையில் விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பில் 3 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதற்கும் ஆணையிட்ட வரலாறு என்பது இன்று படைக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, கிராமப்புறங்களில் இருக்கின்ற மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் விளையாட்டு அரங்கங்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக நிதிகளை இந்த ஆண்டு அள்ளித் தந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துவதற்காக அவர்களுக்கு ஊக்கத் தொகையாகக் கொடுத்த தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி வரலாற்றைப் படைத்தவர், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீச்சல் குளத்தோடு சேர்த்து மாணவர்களுக்குத் தேவையான* shooting *போன்ற பயிற்சி அளிப்பதற்கு ஏதுவான இடம் வள்ளியூர் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, மாணவர்களின் உணர்வுகளை மனதில் கொண்டு, இந்த அரசு உரிய அதிகாரிகளை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று உடனடியாக ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆணையிடும். உங்கள் கனவுகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*